**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 26 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச் செயலகம் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்பிக்கப்பட்ட ஏசீஏ-5 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட முற்பணத்தை விஞ்சி நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 225,840 தொகை முற்பண பெறுவனவுகளாக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சமுர்த்தி திணைக்களம் நேரடி செலவினங்களை மேற்கொண்டிருந்தது. அதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய மாவட்டச் செயலக வளாகத்தின் நிர்மாணங்கள் அதற்கிணங்க பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், அதற்கான காசோலைகள் எழுதப்பட்டு அவை கையில் வைத்திருக்கப்படுவதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினம் ரூபா 10,389,739 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சாதகமற்ற காலநிலை காரணமாக உரிய காலப்பகுதியினுள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர் தற்போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பூர்த்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டிய அதேநேரம் பூர்த்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் உள்ள நடைமுறையல்லா சொத்துக்களின் மீதியானது திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த சொத்துக்களின் மீதியை விட ரூபா 17,532,651 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | **ரூபா** | | | |
| (அ) **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | | |
| (i) 2006 யூலை 14 ஆம் திகதிய 11/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | 141,055 | ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான மேலதிக எரிபொருளானது எரிபொருள் கட்டளைகள் மூலம் பெறப்பட்டிருந்தது. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 97,305 | கைவிரல் அடையாளமிடல் இயந்திரம் மூலம் உள் வருகை மற்றும் வெளிச்செல்லல்கள் உறுதிப்படுத்தப்படாமல் மேலதிகநேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டி - 2006 இன் 5.4.4 (ii) ஆம் வழிகாட்டல் | 5,980,400 | அங்கீகரிக்கப்பட்ட ரூபா 200,000 எல்லையை விஞ்சி 35 கிராமிய அமைப்புக்களிற்கு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகை நடைமுறை மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகங்களால் ரூபா 3,256,460 தொகையான 08 உறுதிச்சீட்டுக்களிற்காக பெறப்பட வேண்டிய நிதிப்பிரமாணம் 137 இன் அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பண கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் சேவையில் இருந்து விலகிய மற்றும் இறந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 321,560 கூட்டுமொத்தமான பதவியணியினர் கடன்களை அறவீடு செய்வதற்கு தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த 05 முதல் 26 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன்கள் அறவிடப்பட்டு வருகின்றதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பான விபரங்கள் உரிய அமைச்சு மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. | நிலுவையாகவுள்ள கடன்களை உரிய காலப்பகுதியினுள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 ஏனைய முற்பணங்களை கொடுப்பனவு செய்தலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நெல் கொள்வனவு செய்வதற்காக 02 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 17,929,775 தொகையான முற்பணம் 05 ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீட்டு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாணங்கள் புறக்கணிக்கப்பட்ட ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த ஒப்பந்தத்திற்காக 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 1,458,504 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டில் நெல் கொள்வனவுக்காக பெறப்பட்ட ரூபா 1,800,000 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களிற்காக கட்டுநிதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேச செயலகங்களினால் சபிரிகம செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ரூபா 8,882,950 கூட்டுமொத்தமான ஏழு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது சில நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதை துரித்ப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத செயற்திட்டங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளின் பிரகாரம் தாமதக்கட்டணங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் துணுக்காய் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இரண்டு தண்ணீர் | திருத்தம் செய்வதற்கும் காப்புறுதிச் சான்றிதழ்கள் மற்றும் வருமான உரிமப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கும், காப்புறுதிச் சான்றிதழ்கள் மற்றும் வருமான உரிமப்பத்திரங்களைப் |

| | | | |
|---|---|---|---|
| | பவுசர்கள் நாளதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனங்கள் தொடர்பான காப்புறுதி சான்றிதழ்கள் மற்றும் வருமான உரிமப்பத்திரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலக வளாகத்தில் 05 வருட காலமாக உழவு இயந்திரம் ஒன்று விளைவற்றிருந்ததுடன் அதன் உரிமைத்துவத்தையும் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிமைத்துவத்தை மாற்றுவதற்கும் செயற்திறனான பயன்பாட்டிற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 09 உத்தியோகத்தர்களினால் நிதிப்பிரமாணம் 881 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிணைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிணைகளை வைப்பிலிடுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களின் 703 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 215 வெற்றிடங்களும் ஒரு மேலதிக உத்தியோகத்தரும் காணப்பட்டனர். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சேவைத் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு மேலதிக உத்தியோகத்தர்களை செயற்திறனாக இணைப்பு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |